


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 04, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 121 ❖ ரூ.10

## வேட்பாளர் தேர்வை அதிமுக பொதுக்குழு முடிவு செய்யலாம்: உச்ச நீதிமன்றம்

# இடியாப்பம்

## குறைந்த கால அவசாசமே உள்ளதால் பொதுக்குழுவை கூட்டாமலேயே வேட்பாளரை தேர்ந்தெடுக்க எடப்பாடி பழனிசாமி தரப்பு திட்டம்

புதுடெல்லி, பிப். 04-

தனது கையொப்பமிட்ட வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் ஏற்க உத்தரவிடக் கோரி எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், வேட்பாளர் தேர்வை அதிமுக பொதுக்குழு முடிவு செய்யலாம் என்றும், வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட முடிவை தேர்தல் ஆணையத்திற்கு அவைத் தலைவர் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.



உச்ச நீதிமன்ற நீதிபதி மகேஷ்வரி தினேஷ் தலைமையிலான அமர்வு முன்பு கடந்த வாரம் அதிமுக இடைக்காலப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஒரு முறையீடு செய்யப்பட்டது. அதில், "ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் எங்களது தரப்பில் தனியாக வேட்பாளரை நிறுத்த விரும்புகிறோம். ஆனால், கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளர் என்ற முறையில் எனது கையொப்பத்துடன் அனுப்பக் கூடிய வேட்பாளரின் பெயரை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்க மறுக்கிறது. எனவே, இந்த விண்ணப்பத்தை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று முறையிடப்பட்டது.

ஜனவரி 30-ம் தேதியன்று, தனது கையொப்பமிட்ட வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் ஏற்க உத்தரவிடக் கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஓபிஎஸ் மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் வியாழன் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பதில்மனுவில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் வேட்பாளரின் வேட்புமனுவை ஏற்பது தொடர்பாக தேர்தல் நடத்தும் அதிகாரிக்குத்தான் அதிகாரம் உள்ளது. எனவே, வேட்புமனுவை ஏற்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி முடிவு செய்வார்.

மேலும், யார் கட்சியின் பொறுப்பாளராக இருப்பவர்களின் கையெழுத்து அங்கீகரிக்கப்படுவது என்பதுதான் விதி. அதன் அடிப்படையில் அதிமுகவின் பொறுப்பாளர் என்ற முறையில் ஆவணத்தில் இருக்கும் கையெழுத்து ஏற்கப்படும். இந்த விவகாரத்தில் இன்னும் விரிவான பதிலை உச்ச நீதிமன்றம் எதிர்பார்த்தால் அதனை தேர்தல் ஆணையம் தாக்கல் செய்யும்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இபிஎஸ், ஓபிஎஸ் மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளரை அதிமுக பொதுக்குழு முடிவு செய்யலாம். பொதுக்குழுவில் எடுக்கப்படும் முடிவு அவைத் தலைவரால் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

வேட்பாளரை தேர்வு செய்யும் பொதுக்குழு முடிவுக்கு கையெழுத்து பெற ஓ.பன்னீர்செல்வம் தரப்புக்கு அனுப்பலாம். பொதுக்குழு முடிவிற்கு கையெழுத்திடுவது குறித்து ஓ.பன்னீர்செல்வம் முடிவெடுக்கலாம்" என்று உத்தரவிட்டுள்ளனர்.

ஆனால் குறைந்த கால அவசாசமே உள்ளதால் பொதுக்குழுவைகூட்டாமலேயே பொதுக்குழு உறுப்பினர்களிடம் ஒப்புதல் பெற்று வேட்பாளரை தேர்ந்தெடுக்க எடப்பாடி பழனிசாமி தரப்பு திட்டமிட்டுள்ளது. அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் சுற்றறிக்கை மூலம் பொதுக்குழு உறுப்பினர்களிடம் ஒப்புதல் பெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று பேரறிஞர் அண்ணாவின் 54 வது நினைவு நாளையொட்டி, வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதி பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, உதயநிதி ஸ்டாலின், மா. சுப்பிரமணியன் உள்ளிட்ட அமைச்சர்கள் சென்னை மேயர் பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஜெயித்துக் காட்டுவோம் பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் பொது தேர்வுகளை எதிர்கொள்வது எப்படி என்ற கருத்தரங்கில். புதுகை வரலாறு நாளிதழ் சார்பில் ஏப்ரல் மாதம் 8,9 ஆகிய இரண்டு நாட்கள் புதுக்கோட்டை விஜய் பேலஸில் நடைபெற இருக்கும் கல்வி கண்காட்சியின் அழைப்பிதளுடன் கூடிய பொது தேர்வு அட்டவணையை கல்லூரியின் தலைவர் ஏவிஎம் செல்வராஜ் தலைமையில் மேலாண்மை இயக்குனர் ஆர்.வைரவன், தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம் மாவட்ட தலைவர் சாலை செந்தில் உள்ளிட்டோர் முன்னிலையில் புதுகை வரலாறு நிறுவனர் & ஆசிரியர் சு.சிவசக்திவேல் வெளியிட கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இரண்டு நாள் கருத்தரங்கில் அரசு பொதுத் தேர்வை எதிர்கொள்ளும் சுமார் 8000 மாணவர்களுக்கு பொதுத்தேர்வு அட்டவணை வழங்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் நகை வியாபாரிகளிடம் போலீஸ் போல் நடித்து சினிமா பாணியில் ரூ.1½ கோடி துணிகர கொள்ளை

ராயபுரம், பிப். 04-

ஆந்திர மாநிலம், பப்பட்லா பகுதியை சேர்ந்தவர்கள் சுபாராவ், ரஹ்மான் ஆகியோர் நகை வியாபாரிகள். இவர்கள் அடிக்கடி சென்னை சவுகார்பேட்டையில் உள்ள குறிப்பிட்ட நகைவியாபாரியிடம் கோடிக்கணக்கான ரூபாய்க்கு நகைகள் வாங்கிச்செல்வது வழக்கம். இதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பு சவுகார்பேட்டையில் உள்ள மொத்த வியாபாரியிடம் நகை ஆர்டர் கொடுத்து இருந்தனர். இதைத்தொடர்ந்து நேற்று அதிகாலை வியாபாரிகள் சுபாராவ், ரஹ்மான் ஆகியோர் நகைக்கு கொடுப்பதற்காக ரூ.1 கோடியே 40 லட்சம் ரொக்கத்தை பையில் வைத்துக்கொண்டு சென்னை வந்தனர்.

அவர்கள் சென்ட்ரலில் இருந்து சவுகார்பேட்டை நோக்கி அதிகாலை 3.30 மணியளவில் ஒரு ஆட்டோவில் சென்று கொண்டு இருந்தனர். யானைக்கவுனி தெரு, துளசிங்கம் தெரு-வீரப்பன் தெரு சந்திப்பில் வந்தபோது திடீரென ஒரு கார் ஆட்டோவை வழிமறித்து நின்றது. அதில் இருந்து இறங்கிய 3 வாலிபர்கள் தாங்கள் போலீசார், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்று சுபாராவ், ரஹ்மான் ஆகியோரிடம் தெரிவித்தனர். அவர்கள் கையில் லத்தி மற்றும் கைவிலங்கு ஆகியவைவைத்து இருந்தனர், இதனால் வியாபாரிகள் சுபாராவ், ரஹ்மானுக்கு சந்தேகம் ஏற்படவில்லை. 3 வாலிபர்களும் வியாபாரிகளின் பையை சோதனை செய்தபோது அதில் கட்டு கட்டாக பணம் இருப்பதை



கண்டனர். உடனே அவர்கள் வியாபாரிகள் சுபாராவ், ரஹ்மானை தாக்கி கீழே தள்ளினர்.

மேலும் கத்தியை காட்டி மிரட்டி அவர்களிடம் இருந்த ரூ.1 கோடியே 40 லட்சம் ரொக்கத்தை பறித்து அங்கிருந்து காரில் தப்பி சென்று விட்டனர், இதனால் நகை வியாபாரிகள் சுபா ராவ், ரஹ்மான் மற்றும் ஆட்டோ டிரைவர் அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து யானைக்கவுனி போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். இதனை வைத்து போலீஸ்போல் நடித்து துணிகர கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளை கும்பல் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். வியாபாரிகள் நகை வாங்க வருவதை நன்கு அறிந்த கொள்ளைகும்பல் அவர்களை பின்தொடர்ந்து வந்து பணத்தை பறித்து சென்று உள்ளனர். அவை அனைத்தும் 500 ரூபாய் நோட்டுகள் ஆகும். கொள்ளையர்கள் ஆந்திராவில் இருந்தே வியாபாரிகளை பின்தொடர்ந்து வந்து இருக்கலாம் என்று தெரிகிறது. அவர்களை பிடிக்க போலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நகை வியாபாரிகளிடம் ரூ.1 கோடியே 40 லட்சம் பறிக்கப்பட்ட சம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




## தமிழகத்தில் 5 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை , பிப். 04-

தமிழகத்தில் 5 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் உள்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சென்னைப் பெருநகர காவல்துறையின் சைபர் க்ரைம் பிரிவின் துணை ஆணையர் கிரண் சுருதி, ராணிப்பேட்டை மாவட்ட எஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார். ராணிப்பேட்டை மாவட்ட எஸ்பியாக பணியாற்றி வந்த தீபா சத்யன் சென்னையில் உள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறையின் எஸ்பியாக பணியிடமாற்றம் செய்யப்படுகிறார்.


கடலூர் மாவட்ட எஸ்பி சக்தி கணேசன் பணியிடமாற்றம் செய்யப்பட்டு, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு எஸ்பியாக நியமிக்கப்படுகிறார். சென்னைப் பெருநகர காவல் துறை கொளத்தூர் காவல் மாவட்டம் துணை ஆணையர் ராஜாராம், கடலூர் மாவட்ட எஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார். கட்டாய காத்திருப்புப் பட்டியலில் உள்ள எஸ்பி ரவளி பிரியா, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைய எஸ்பியாக நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் பேறிஞர் அண்ணாவின் 54– வது நினைவு நாள்

தென்காசி,பிப்.4–

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் முன்னாள் முதல்வர், பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு நாளை முன்னிட்டு கிருஷ்ணாபுரம் அண்ணாவின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் திமுக மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், மா. செல்லத்துரை மரியாதை செலுத்தினார்.



நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹப்பூர் ரகுமான், அவைத் தலைவர் பெட்டி முருகையா, மாவட்ட பிரதிநிதி தம்புராஜ், நகர் மன்ற உறுப்பினர் பத்தாவது வார்டு முருகன், ஒன்றாவது வார்டு காளிமுத்து, மூன்றாவது வார்டு செந்தில்குமார், வேலுச்சாமி, முருகையா, மணிமேகலை, கஸ்தூரி, பூ ராஜா, பேச்சிமுத்து, முருகானந்தம், நல்லையா, செய்யது மசூது, மஜித், வஹாப்,தம்பிதுரை, மதி, கணேசன், இத்தாலியன் பீரப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அரசியல் கட்சிகள் சார்பில் அவரது உருவ சிலைக்கு மாலை அணிவிப்பு

அரியலூர்,பிப் .04

அரியலூரில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு, பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில், அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டது.



தமிழகத்தின் முன்னாள் முதல்வர், பேரறிஞர் அண்ணாவின் 54 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது உருவ சிலைக்கு, திமுக சார்பில் அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளரும், தமிழக போக்குவரத்து துறை அமைச்சருமான எஸ். எஸ். சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, அரியலூர் நகர செயலாளர் முருகேசன், நகராட்சித் தலைவர் சாந்தி கலைவாணன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், அறிவழகன், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

மதிமுக அரியலூர் மாவட்ட செயலாளர் மற்றும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா, அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

எம்ஜிஆர் கழகம் சார்பில், கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் என். ஜி. கலைவாணன், அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கட்சியின் நகர செயலாளர் மருதமுத்து, மற்றும் அரியலூர், பெரம்பலூர் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதிமுக மாவட்ட செயலாளர் மற்றும் முன்னாள் அரசு தலைமை கொறடா, தாமரை எஸ். ராஜேந்திரன், அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி செயலாளர் ஓ பி சங்கர், வழக்கறிஞர் அணி செயலாளர் வெங்கடாஜலபதி, நகர செயலாளர் ஏ .பி .செந்தில், ஒன்றிய கவுன்சிலர்கள் சுந்தரவடிவேல், கடுகூர் முருகேசன், ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்பிரமணியன், நகர நிர்வாகி ஏ. ஆர். வி .ஹரி கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

அதிமுக ஓபிஎஸ் அணி சார்பில், அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் விஜய பார்த்திபன், அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கட்சியின் நகர செயலாளர் உத்தாண்டம் கார்த்திக், மாவட்ட அணி நிர்வாகிகள் லோகுராஜ், வரதராஜன், மாவட்ட மாணவர் அணி செயலாளர் ஜெம் கண்ணன், பாலமுருகன், கீழ கொளத்தூர் மோகன், கல்லங்குறிச்சி பொன்னுசாமி, அழகு பாண்டியன், சுண்டக்குடி சுரேஷ், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் தைத் தேரோட்டம் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

திருச்சி பிப்–4

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் தைத் தேரோட்டம் நேற்று நடைபெற்றது. இக்கோயிலில், ஆண்டுதோறும் நடைபெறும் தைத் தேர் திருவிழா ஜன.26–ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 4–ம் திருநாளான ஜன. 29–ம் தேதி தங்க கருடவாகனத்தில் நம்பெருமாள் முக்கிய வீதிகள் வழியாக உத்தரவீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



பிப்.2–ம்தேதி காலை 7.30 மணிக்கு கண்ணாடி அறையிலிருந்து நம்பெருமாள் பல்லக்கில் புறப்பட்டு உத்திர வீதிகளில் வலம் வந்து காலை 9 மணிக்கு ரங்கவிலாச மண்டபம் வந்தடைந்தார். அங்கிருந்து மாலை 6.30 மணிக்கு குதிரை வாகனத்தில் புறப்பட்டு உத்திர வீதிகளில் வலம் வந்து நம்பெருமாள் வையாளி கண்டருளினார். பின்னர் இரவு 8.30 மணிக்கு கண்ணாடி அறை சென்றடைந்தார். திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று (பிப்.3) காலை நடைபெற்றது.

இதற்கென நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் அதிகாலை 3.45 மணிக்கு கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு தைத்தேர் மண்டபத்துக்கு 4.30 மணிக்கு வந்தடைந்தார். அதிகாலை 4.30 மணி முதல் 5.15 மணி வரை ரதரோஹணம் (தனுர் லக்னத்தில்) நிகழ்ச்சி நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட தேரில் நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் எழுந்தருளிய பின் காலை 6 மணிக்கு தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டது. தேர் நான்கு உத்திர வீதிகளில் வலம் வந்து பின்னர் தேர் நிலையை வந்தடைந்தது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்து இழுத்தனர். இதைத் தொடர்ந்து இன்று சப்தாவரணம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. தைத் தேர் நிறைவு நாளான பிப்ரவரி 5–ம் தேதி நம்பெருமாள் ஆளும் பல்லக்கில் எழுந்தருளி உள்வீதிகளில் வலம் வருகிறார். இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் செ.மாரிமுத்து, அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் செய்துள்ளனர்.






ஈரோடு கிழக்கு தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் உட்பட10 பேர் மனு தாக்கல் ஈரோடு கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் வந்தார். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஜன.31–ம் தேதி தொடங்கியது. மூன்றாம் நாளான நேற்று, நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் மேனகா நவநீதன் (36), கட்சி நிர்வாகிகளுடன் மாநகராட்சி அலுவலகத்துக்கு ஊர்வலமாக வந்து, தேர்தல் நடத்தும் அலுவலர் சிவகுமாரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். முன்னதாக கரும்புகளை ஏந்தியவாறு நாம் தமிழர் கட்சியினர் ஊர்வலமாக வந்தனர். கரும்பை எடுத்துச் செல்லக் கூடாது என போலீஸார் தெரிவித்ததை அடுத்து வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.இதுதவிர 9 சுயேச்சைகள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# ஈவிகேஎஸ் இளங்கோவன் நேற்று வேட்புமனு தாக்கல்

ஈரோடு பிப்–4

ஈரோடு கிழக்கு தொகுதிதிமுககூட்டணி வேட்பாளர் ஈவிகேஎஸ் இளங்கோவன் தனது வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தார்.



ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வரும் 27–ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு கடந்த 31–ம் தேதி தொடங்கிய நிலையில், இதுவரை தேமுதிக, நாம் தமிழர் கட்சி உட்பட மொத்தம் 20 வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில், திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ் இளங்கோவன், நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில், எம்பிக்கள் கணேசமூர்த்தி, அந்தியூர் செல்வராஜ், காங்கிரஸ் சட்டப்பேரவைக்குழு தலைவர் செல்வபெருந்தகை, முன்னாள் எம்.எல்.ஏ. வி.சி.சந்திரகுமார் ஆகியோருடன், தேர்தல் நடத்தும் அலுவலரான க.சிவகுமாரிடம், ஈவிகேஎஸ் இளங்கோவன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், " இந்த தேர்தலில் தனிப்பட்ட மனிதர் வெற்றி அடைவதை விட மதச்சார்பற்ற சக்திகளின் வேட்பாளர் வெற்றி பெற விரும்புகிறேன். என் மகன் திருமகன் ஈவெரா விட்டுச்சென்ற பணிகளை தொடர விரும்புகிறேன். மாவட்ட அமைச்சர் முத்துசாமியுடன் இணைந்து ஈரோட்டுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்து எனது மகன் திருமகன் ஈவெரா பட்டியல் தயாரித்துள்ளார். அதில் பல பணிகளை செய்துள்ளார். மீதம் உள்ளவற்றை மேற்கொள்ள நான் பாடுபடுவேன். குறிப்பாக ஈரோடு நகரில் போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், ஜவுளி மற்றும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், சாயக்கழிவு நீரை அப்புறப்படுத்துவது குறித்து அமைச்சர் மற்றும் முதல்வருடன் ஆலோசித்துநடவடிக்கை எடுப்பேன்.

திமுகவினர் மிகச்சிறப்பாக தேர்தல் பணி செய்து வருகின்றனர். வேட்பாளர் அறிவிப்பிற்கு முன்பே எனக்காக ஆதரவு தேடத் தொடங்கி விட்டனர். இந்த கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறும். அதிமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல் தள்ளிப்போனது குறித்து நான் கவலைப்படவில்லை. ஈரோட்டிற்கு நல்ல காரியம் செய்யவே நான் போட்டியிடுகிறேன். யார் எதிர்க்கிறார்கள் என்பது குறித்து எனக்கு கவலையில்லை. ஈரோடு கிழக்கு தொகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் குறித்து தேர்தல் ஆணையம் கவனித்து நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



திருநெல்வேலி மாவட்டம் பணகுடியில் ராமலிங்க சுவாமி, அருள்மிகு சிவகாமி அம்மன் திருக்கோவில் தைப்பூச தேர்த்திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினரும், தமிழக சட்டப்பேரவை தலைவருமான, மு. அப்பாவு கலந்து கொண்டு ராமலிங்க சுவாமி கோவில் திருத்தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர். உடன் தாசில்தார் வள்ளிநாயகம், தொழிலதிபர் மோகன்தாஸ், மு.சங்கர் மாதிமுக, அசோக் குமார், தளவாய் பாண்டியன், ஆர்.எஸ். முத்துப்பிள்ளை, மாணிக்கம், ராஜாராம், ஐயப்பன், சுப்ரமணியன், பரமசிவன் பிள்ளை, ஆறுமுகம், ரமேஷ், ஆப்ரஹாம், பணகுடிசெயல் அலுவலர் ராதா, கொட்டாரம் செயல் அலுவலர் ராஜநம்பி, மௌனகுரு சித்தர், தண்டையார் குளம் பொன் பாண்டியன் ஆகியோர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து இழுத்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகே உள்ள வல்லத்ராகோட்டை ராமச்சந்திர புறத்தை சேர்ந்த அரங்கன் மனைவி சிட்டு (55) வியாழக்கிழமை காலையில் சாப்பாடு எடுத்துக்கொண்டு கூலி வேலைக்கு சென்றவர் பாலக்குடி பட்டி காளி கோவில் அருகில் சென்ற போது மின்சார வயர் மேல் விழுந்து இறந்து விட்டார், இது பற்றி காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, இறந்தவரின் உடலை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: ஓ.பி.எஸ் அணி வேட்பாளர் செந்தில் முருகன் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, பிப். 04–

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிடும் ஓ.பி.எஸ் அணி வேட்பாளர் செந்தில் முருகன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 27–ந் தேதி நடக்கிறது. இந்த இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணி சார்பில் காங்கிரசும், அ.தி.மு.க., ஓ.பி. எஸ் அணி, தே.மு.தி.க., அ.ம.மு.க., நாம் தமிழர் கட்சி என முக்கிய கட்சிகளின் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு உள்ளனர்.



இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 31–ந்தேதி தொடங்கியது. தே.மு.தி.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட நேற்று வரை மொத்தம் 20 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இதனை தொடர்ந்து அதிமுக ஓ.பி.எஸ் அணி வேட்பாளர் செந்தில் முருகன் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அப்போது இரட்டை இலை சின்னத்தை கோரி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பாளர் செந்தில் முருகன் விருப்ப மனுவும் அளித்தார்.

# கெம்ஃபெஸ்ட் போட்டிகளில் புதுக்கோட்டை ஜெ.ஜெ. கல்லூரி மாணவன் முதலிடம்

புதுக்கோட்டை,பிப்.4–

திருச்சிராப்பள்ளி, ஹோலிகிராஸ் கல்லூரி, வேதியியல் துறையின் சார்பாக கெம்ஃபெஸ்ட் என்ற துறை சார்ந்த போட்டிகள் நடைபெற்றது. இதில் புகைப்படம் எடுத்தல், டம்சரட்ஸ், அட்ஷாப், போஸ்டர் பிரசன்டேஷன், ரங்கோலி, கெம் கனெக்சன் மற்றும் கெம் கார்டூனிங் போன்ற போட்டிகள் நடைபெற்றன.



இதில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 13 கல்லூரிகளில் இருந்து, சுமார் 250–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த போட்டிகளில் புதுக்கோட்டை, ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி, முதுநிலை இரண்டாம் ஆண்டு வேதியியல் மாணவ, மாணவிகள் சுமார் 20 பேர் கலந்து, கொண்டனர்.

இதில் சபரீஷ் என்ற மாணவன் புகைப்படம் எடுத்தலில் முதல் பரிசும்,அஜித் பிரசாத், தீனதயாளன் மற்றும் அருண்குமார் ஆகியோர் கெம் கனெக்சன் என்ற போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றனர். பரிசு பெற்ற வேதியல் துறை மாணாக்கர்களை, கல்லூரி செயலாளர் சுப்பிரமணியன், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளை அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன், முதல்வர் ஜ.பரசுராமன் மற்றும் துறைத்தலைவர் முத்துக்குமார் ஆகியோர் பாராட்டி, ஊக்கப்படுத்தி மகிழ்ந்தனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடிக்கு வருகை புரிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மற்றும் 1 வது மண்டல தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் உற்சாக வரவேற்பு அளித்ததுடன் நினைவு பரிசாக கேடயம் வழங்கினர்.

# சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை



காஞ்சிபுரம், பிப். 4 -

காஞ்சிபுரம் ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட சன்முகா நகரில் அப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடையினை காஞ்சிபுரம் எம்.எல்.ஏ சி.வி.எம்.பி. எழிலரசன் பொது மக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து நியாய விலைக் கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களையும், இனிப்புகளையும் வழங்கினார்.

வாலாஜாபாத் ஒன்றியம் சிறுவள்ளுர் கிராமத்தில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.27 லட்சத்து 62 ஆயிரம் மதிப்பில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான பணிகளையும் காஞ்சிபுரம் எம்.எல்.ஏ சி.வி.எம்.பி. எழிலரசன் அடிக்கல் நாட்டி கட்டிடப்பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் ஒன்றிய தலைவர் மலர்க்கொடிகுமார், மாவட்ட ஊராட்சிகுழு துணை தலைவர் நித்யா சுகுமார், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் பருநெல்லி பாபு, ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராம்பிரசாத், அதிலட்சுமி ரவி, கோனேரிக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் சைலஜா சேகர் உள்ளிட்ட உள்ளாட்சித் துறை பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# அனைத்திந்திய முதலியார், பிள்ளைமார் சங்க செங்கல்பட்டு மாவட்ட மகளிர் அணி கூட்டம்



தாம்பரம், பிப். 4 -

அனைத்திந்திய முதலியார், பிள்ளைமார் சங்கம் செங்கல்பட்டு மாவட்ட மகளிர் அணி கூட்டம் புது பெருங்களத்தூரில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களா தேவகி வேணுகோபால் மாநில மகளிர் அணி துணைதலைவி, பூங்கொடி மாநில மகளிர் அணி செயலாளர் வடக்கு, கவிதா நந்தகுமார் தலைவி, உமாருவமணி, செயலாளர், மற்றும் மோஹனவல்லி, சங்கரகோமதி, வித்யா லஷ்மி, சுமித்ரா, பாலவள்ளி, சிறப்பு அழைப்பாளர் தாரணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் சமுதாய உயர்விற்காக செயல் படுவது குறித்து விவாதிக்கப்பட்டது. சங்கத்தின் செயல்பாடுகள், குறிக்கோள்கள், நடைமுறையில் வழங்கப்படும் உதவிகள் உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து தெரிவிக்கப்பட்டது. நிர்வாகிகள் மற்றும் சமுதாய பெண்களின் கோரிக்கைகள் கேட்கப்பட்டது, மருத்துவம், மேட்ரிமோனி, சுயதொழில், இலவச சட்ட ஆலோசனை, கல்வி, திறன் மேம்பாடு, விதவை பென்சன் தீர்வு அளிக்க உறுதி மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட நிர்வாகிகளுக்கு விசிட்டிங் கார்டு வழங்கப்பட்டது. அனைவருக்கும் உறுப்பினர் சேர்க்கைக்கான மாதிரி படிவம் வழங்கப்பட்டது.

B2B வாய்ப்புகள் குறித்து உறுதி அளிக்கப்பட்டது. சமுதாய வளர்ச்சி மற்றும் உறுப்பினர் சேர்க்கையின் அவசியம் குறித்து தெரிவிக்கப்பட்டது. கால் மிதியடி மெஷின், செக்கு இயந்திரம், தையல் இயந்திரம் வழங்குதல் குறித்து பெண்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் கோலப்போட்டியில் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த தேவி மாரியப்பன் முதல் பரிசை வென்றார்.

இந்த கூட்டத்தில் உமா என்பவருக்கு வெகு நாட்களாக வாங்க முடியாத விதவை பென்சன் வாங்கி தருவது என உறுதி அளிக்கப்பட்டது.

### இராயபுரத்தில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில்

# புகைப்பட கலைஞரின் கேமிரா திருட்டு- இருவர் கைது



ஆகாஷ்



முகேஷ்

சென்னை, பிப். 4 -

சென்னை திருவொற்றியூர் காலடிப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் நந்தகுமார். இவர் ஸ்டுடியோ வைத்து நடத்தி வருகிறார். இராயபுரம் சூரியநாராயணன் சாலையில் உள்ள அறிவகம் திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் புகைப்படம் எடுத்து முடித்து விட்டு டேபிள் மீது தன்னுடைய நிக்கான் 300D கேமிரா வைத்து விட்டு போனில் பேசி கொண்டு இருந்த போது மர்ம நபர்கள் திருடி சென்று விட்டனர்.

பின்னர் டேபிளில் வைத்திருந்த கேமரா காணமல் போய்விட்டதை பார்த்து அதிர்ச்சி அடைந்த நந்தகுமார் உடனடியாக இராயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சிசிடிவி கேமிரா காட்சிகளை கைப்பற்றினர்.

இராயபுரம் உதவி ஆணையர் லட்சுமணன் உத்தரவின் பேரில் குற்றப்பிரிவு ஆய்வாளர் அருள் செல்வன் தலைமையில் முதல் நிலை காவலர்கள் ஜீவா, மணிகண்டன்,கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில் போலீசார் ஈடுபட்டனர். கேமிரா திருட்டில் ஈடுபட்டவர்கள் யானை கவுனி பகுதியில் சுற்றித்திரிந்து வருவதாக தனிப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

தகவலறிந்து விரைந்து சென்ற தனிப்படை போலீசார் இரு இளைஞர்களை பிடித்து விசாரணை செய்த போது திருவுயது கொண்டித்தோப்பு கல்யாணபுரம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய முகேஷ், யானை கவுனி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஆகாஷ் என்கின்ற கோழி ஆகாஷ் என தெரியவந்தது முகேஷ் மீது கடற்கரை காவல் நிலையம், பூக்கடை காவல் நிலையத்தில் அடிதடி மற்றும் திருட்டு வழக்குகள் இருப்பது தெரியவந்தது. கேமராவை யானை கவுனி பழைய மேம்பாலம் அருகே ஆட்டோவில் துணி போட்டு மறைத்து வைத்து இருப்பதாக போலீசாரிடம் தெரிவித்தனர். போலீசார் கேமிராவை பறிமுதல் செய்து இருவரையும் கைது செய்து வழக்குப்பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகே பேறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு பேறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு அதிமுக சார்பில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பவுன்ராஜ் மாலை அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்தினார் உடன் மாவட்ட துணைச் செயலாளர் வா.செல்லையன் மயிலாடுதுறை தெற்கு ஒன்றிய செயலாளர் கோட்டூர் சந்தோஷ்குமார் மயிலாடுதுறை நகரக் செயலாளர் செந்தமிழன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட பிற அணி நிர்வாகிகள், நகர அதிமுக நிர்வாகிகள் , மற்றும் கட்சி தொண்டர்கள் உடன் இருந்தனர்.



பாரதிய ஜனதா கட்சி ஓ பி சி அணியின் மாநிலத் துணைத் தலைவர் கிடங்கள் எஸ்.ராஜ்மோகன் ஸ்தபதி அவர்களின் தந்தை சுவாமிநாதன் கடந்த 19.01.2023 அன்று இயற்கை எய்தினார். அவரின் திருவுருவ படம் திறப்பு விழா 3.2.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணியளவில் அவருடைய இல்லம் அமைந்துள்ள மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வீட்டில் நடைபெற்றது. பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.வெங்கடேசன் படத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் மோடி கண்ணன், ஒன்றிய தலைவர் வினோத், இளைஞர் அணி மாநில செயற்குழு உறுப்பினர் சம்பத் மற்றும் துரை, செழியன், அருள்ராஜன், மைல் ரவி, ராஜகோபால், சரவணன், முன்னாள் மாநில நிர்வாகி சஞ்சீவி, தங்க சரவணன் உள்ளிட்ட ஏராளமான மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரி திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு மையம் இணைந்து இறுதியாண்டு மெக்கானிக்கல் எலக்ட்ரிக்கல்,இசிஇ, மற்றும் சீவில் துறை சேர்ந்த 150 மாணவர்களுக்கு கேம்பஸ் நேர்காணல் 1.2.2023 மற்றும் 2.2.2023 இரண்டு நாள்கள் நடைபெற்றது. சென்னையில் இருந்த ஜெப் வப்கோ நிறுவனத்தின் மேலாளர் அன்புசெல்வன் மற்றும் உதவி மேலாளர் திரு.சூர்ய நாராயணன் வப்கோ நிறுவனத்தின் வேலை வாய்ப்புகளை பற்றிய உரையை வழங்கினார். நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பிரான்சிஸ் தலைமை வகித்தார். கந்தன் துறைத்தலைவர் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் கூட்டத்தை வாழ்த்திப் பேசினார். ஜெயபிரகாஷ் வரவேற்புரை வழங்கினார், செந்தில்வேல் இன்றைய வேலைவாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மேகநாதன் நன்றி உரை வழங்கினார். இதில் கே.பி.டி.சிமற்றும் ஏ வி சி பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த 60 மேற்பட்ட மாணவர்கள் நேர்காணலில் பயன் அடைந்தனர்.



அதிமுக இடைக்கால பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை சென்னை பசுமை வழி சாலையில் உள்ள இல்லத்தில் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் பி.ஜாகிர் உசேன் நேரில் சந்தித்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைக்கால தேர்தல் வேட்பாளரும் ஈரோடு மாநகர மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் கே.எஸ்.தென்னரசு மகத்தான வெற்றி பெற நாகூர் தர்காவில் அன்னதானம் செய்து சிறப்பு பிரார்த்தனை செய்த தர்கா போர்வையை வழங்கினார்



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் சிவபிரசாந்த் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



பேரறிஞர் அண்ணாவின் 54 வது நினைவு தினத்தை முன்னிட்டு மயிலாடுதுறை சித்தர்காட்டில் அமைந்துள்ள அண்ணாவின் திருஉருவசிலைக்கு மயிலாடுதுறை திமுக கட்சியின் மேற்கு ஒன்றிய செயலாளர் மூவலூர் மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



சென்னை கொருக்குப்பேட்டை பாரதி நகர் மெயின் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு திருமால் முருகன் திருக்கோவிலில் 17 ஆம் ஆண்டு தைப்பூச திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட உள்ளது . அதனை முன்னிட்டு கோவிலில் பந்தக்கால் நடும் விழா நடைபெற்றது. இதில் மாதர்கள் மற்றும் ஊர் முக்கிய பிரமுகர்கள், பூசாரிகள் கலந்து கொண்டனர், தைபூசம் அன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாதர்கள் பால்குடம் எடுக்க உள்ளனர். கோவிலில் சிறப்பு பூஜை நடைபெறும், மேலும் மதியம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட உள்ளது. நிகழ்ச்சி ஏற்பாடு பாரதி நகர் தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள் ஜி. சீனிவாசன் எஸ் . காதர் உசேன், டி சீனிவாசன், வழக்கறிஞர் த.அஜித் குமார் ஆகியோர் ஊர் முக்கியஸ்தர்கள், மாதர்கள், பொதுமக்கள், பக்தகோடிகள் உதவியுடன் நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

# அண்ணாவின் 54வது நினைவு நாள் காரைக்காலில் அதிமுகவினர் அஞ்சலி



காரைக்கால், பிப்,4

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் அண்ணாவின் 54வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட அண்ணாதிராவிடமுன்னேற்ற கழகம் சார்பில் காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி பகுதியில் அமைந்துள்ள பேறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அதிமுக காரைக்கால் மாவட்ட செயலாளர் எம். வி.ஓமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அசனா உள்ளிட்ட ஏராளமான அதிமுக பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு பேருந்து அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மழை தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# மயிலாடுதுறை அருகே ராகு–கேது பரிகார ஸ்தலமான கோடங்குடி கார்கோடகநாதர் சுவாமி கோயிலில் கும்பாபிஷேகம்





மயிலாடுதுறை, பிப். 04-

முற்காலத்தில் சப்தம் மற்றும் அஷ்ட நாகங்களில் ஒன்றான ராஜநாகமான கார்கோடகன் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்க சிவபெருமானை பூஜித்து சாபவிமோசனம் பெற்ற தலம் என்பதால் இத்தலம் கார்க்கோடகன்குடி என்று வழங்கப்பட்டு, பின்னர் மருவி தற்போது கோடங்குடி என அழைக்கப்படுகிறது. 1951-ஆம் ஆண்டு காஞ்சி பெரியவர் வந்து வழிபட்ட சிறப்புக்குரிய தலமான இக்கோயிலில் கடைசியாக 2008-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

15 ஆண்டுகள் ஆன நிலையில், மீண்டும் கும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டு, திருப்பணிகள் தொடங்கி நிறைவுற்றது. இதையடுத்து, புதன்கிழமை காலை விக்னேஸவர பூஜை, கணபதி ஹோமத்துடன் முதற்கால யாகசாலை பூஜை தொடங்கியது. கும்பாபிஷேக தினமான நேற்று நான்காம் கால யாகசாலை பூஜை நடத்தப்பட்டு, பூர்ணாகுதி செய்யப்பட்டு மகாதீப ஆராதனை காட்டப்பட்டது. தொடர்ந்து கரம் புறப்பாடு செய்யப்பட்டு காலை 10 மணி அளவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு நடத்தினர்.

# பெரியபாளையம் பவானி அம்மன் கோவிலில் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



**ஊத்துக்கோட்டை, பிப். 4 -**

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் பேரறிஞர் அண்ணாவின் 54-வது நினைவு நாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு, 3,000 பேருக்கு பொது விருந்து, கோவிலுக்கு காணிக்கையாக வந்த புடவைகளை 10,000 பெண்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கோவிலின் அறங்காவலர் லோகமித்ரா தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக திமுகவின் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜே. மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு ஏழை பெண்களுக்கு இலவச புடவைகளை வழங்கி, பொது விருந்தை துவக்கி வைத்து, சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் ஒன்றிய தலைவர் வடமதுரை கே.ரமேஷ், திமுக நிர்வாகிகள் ஏ.வி. ராமமூர்த்தி, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, கே.வி.லோகேஷ், வி.பி.ரவிக்குமார், வடமதுரை அப்புன், வக்கீல்கள் சீனிவாசன், முனுசாமி, சங்கர், தண்டலம் ரவி மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நுகர்வோருக்கு தலைக்கவசம் வழங்காததால் 75 ஆயிரம் அபராதம்: நாகை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு



மயிலாடுதுறை, பிப். 04-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா சேமங்கலம் ஊராட்சி எருமல் கிராமத்தில் கலியமூர்த்தி மகன் இராஜசேகர் (37) என்பவர் வசித்து வருகிறார் இவர் மயிலாடுதுறை- திருவாரூர் சாலையில் இயங்கிவரும் பாவா மோட்டார்ஸ் நிறுவனத்தில் கடந்த 28. 12.2020-ல் ஹோண்டா நிறுவனத்தின் யூனிகான் 160 ஏ.பி.எஸ் என்ற சிவப்பு நிறம் கொண்ட இருசக்கர மோட்டார் வாகனத்தை ரூ- 1,22,078/- முழுவதும் ரொக்கமாக கொடுத்து வாங்கியுள்ளார். இதில் இன்சூரன்ஸ் தொகை, ஆர் டி ஒ அலுவலக செலவு என மேற்படி தொகையில் சேர்த்து வாங்கியுள்ளனர்.

இந்நிலையில் தனக்கு இரு சக்கர வாகனத்தை விற்ற நிறுவனம் வாகனத்தை விற்கும் போது தலைக்கவசம் இலவசமாக வழங்குவதாக கூறிய நிலையில் தனக்கு வழங்காததால் பல முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டும், நேரடியாக சென்றும் கேட்டுள்ளார் இராஜசேகர். ஆனால் இருசக்கர மோட்டார் நிறுவனமோ அலைக்கழித்து உதாசீனப்படுத்தி வந்துள்ளனர். வாகனப்பதிவு மற்றும் இன்சூரன்ஸ்க்கு ஆகும் செலவைவிட அதிகப்படியான தொகையை வாங்கி தன்னை ஏமாற்றி விட்டதாக மன உளைச்சலுக்கு உள்ளான இராஜசேகர் தமிழ்நாடு மக்கள் சட்ட விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் நல சங்கத்தினை நாடினார்.

அப்போது அச்சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவரும், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பு-(FEDCOT) வேளாண்மை இயக்குனருமான டாக்டர்.க.திருமுருகன் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மக்கள் சட்ட விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் நலச் சங்கத்தின் மாவட்ட வழக்கறிஞர் ஜீவானந்தன் ஆலோசனையின்படியும் இரு சக்கர வாகனத்தை வாங்கிய நுகர்வோராகிய இராஜசேகர் நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கினை விசாரித்த நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் தஷ்ணாமூர்த்தி, உறுப்பினர்கள் கமல்நாத், சிவகாமி செல்வி ஆகியோர் 1. புகார்தாரருக்கு எதிர்தரப்பினர் முழு அளவிலான தலைக்கவசம் தரவேண்டும் என்றும், 2. புகார்தாரருக்கு, எதிர்தரப்பினர் சேவைக் குறைபாடு, மன உளைச்சல் ஏற்படுத்தியமைக்காக ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்தி வைக்க வேண்டும் என்றும்,3. புகார்தாரருக்கு ஏற்பட்ட இந்த வழக்கு செலவுத் தொகைகளுக்காக எதிர்தரப்பினர் ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலுத்தி வைக்க வேண்டும் என்றும், மேற்கண்ட அனைத்து தொகைகளையும் இந்த உத்தரவு பகிரப்பட்ட இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் புகார் தாக்கல் செய்த தேதி முதல்மேற்கண்ட அனைத்து தொகைகளுக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.100/-க்கு (ரூபாய் ஒரு நூறு மட்டும்) 12% வட்டி கணக்கிட்டு அனைத்து தொகைகளை செலுத்தி முடிக்கும் வரை செலுத்த வேண்டும் என்று இந்த ஆணையம் உத்தரவிடுகிறது. என நாகப்பட்டினம் நுகர்வோர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் சாதிக்கலாம் வாங்க கருத்தரங்கம்





புதுக்கோட்டை, பிப். 4-

புதுக்கோட்டை லெணா விலக்கு அருகில் உள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம் சர்பில் பத்தாம் வகுப்பு அரசு தேர்வை எதிர்கொள்ள உள்ள மாணவர்களுக்கான “சாதிக்கலாம் வாங்க” என்ற வழிகாட்டல் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வழிகாட்டல் நிகழ்ச்சிக்கு செந்தூரான் கல்வி நிறுவனங்களின் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார், புதுக்கோட்டை தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட தலைவர் கண்ணன் மற்றும் நிர்வாக இயக்குநர் வயிரவன், கல்லூரி துணைத் தலைவர் நடராஜன் ,செயலாளர் தியாகராஜன் மற்றும் கல்லூரி முதல்வர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதன்மைச்செயல் அலுவலர் கார்த்திக் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் மற்றும் புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலர் (ஓய்வு) சாமிசத்தியமூர்த்தி ஆகியோர் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் சிறப்புரை வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்ட தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ் ராஜாராம் கலந்துகொண்டனர். மேலும் இவ்வழிகாட்டுதல் நிகழ்ச்சிக்கு மாவட்ட உதவிதிட்ட அலுவலர் சுதந்திரன் மற்றும் தங்கமணி ஆகியோர்கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த 4200 மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு வல்லுநர்கள் தந்த குறிப்புகளை பதிவுசெய்து கொண்டனர்.

இவ்விழாவில் வல்லுநர் குழு ஆசிரியர்கள் பாலசுப்பிரமணியன், மாரியப்பன், கிருஷ்ணவேணி, லாரன்ஸ் அலெக்சாண்டர், சந்திரசேகரன், ஜெயலெட்சுமி, பாண்டியராஜன் ஆகியோர் படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற எவ்வாறு கடைசிநேர பயிற்சி மேற்கொள்வது எனபது குறித்தும் நன்கு படிக்கும் மாணவர்கள் 100/100 மதிப்பெண் பெறசெய்ய வேண்டியவைகளையும்; தவிர்க்க வேண்டியவைகளையும் பற்றி சிறப்புடன் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட பொருளாளர் சுரேஷ் மற்றும் மாவட்ட அமைப்புச் செயலளர் சுப்பிரமணியன் கலந்துகொண்டனர். இதில் கல்லூரி தாளாளர் ராமையா முதன்மை செயல் இயக்குநர் பாண்டிகிருஷ்ணன் மனிதவள இயக்குநர் மீனாவயிரவன் கல்லூரி நிர்வாகிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட செயலாளர் தென்னரசு நன்றியுரையாற்றினார், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு தேவையான பேருந்து வசதி மற்றும் மதிய உணவு வசதி ஆகியவற்றை கல்லூரி நிர்வாகம் சார்பில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வழங்கினார்கள்.

# புதுக்கோட்டை என்கே ஜூவல்லரியின் புதிய ஷோரூம் திறப்பு விழா நாளை நடைபெறுகிறது

புதுக்கோட்டை , பிப்-4

புதுக்கோட்டையில் பாரம்பரியமிக்க நகை கடைகளில் ஒன்றான புதுக்கோட்டை என்கே ஜூவல்லர்ஸ் 26 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் புதிய ஷோரூம் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

புதுக்கோட்டை நெல்லுமண்டித் தெருவில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெற்ற வெள்ளிவிழாக் கண்ட கைராசி ஸ்தாபனம் என்று அனைவராலும் பெருமையாக பேசப்படும் என்கே ஜூவல்லரி புதிய ஷோரூம் திறப்பு விழாவை முன்னிட்டு 916 கேடிஎம் ஹால்மார்க் தங்க நகைகளுக்கு கிராமிற்கு ரூபாய் 150 குறைத்துவிற்பனை செய்யப்பட உள்ளது.

இந்த சலுகை பிப்ரவரி 5 ஆம் தேதியிலிருந்து 7ம் தேதி வரை மூன்று நாட்களுக்கு மட்டும் நடைமுறையில் இருக்கும். அதேபோல் வெள்ளி கொலுசு, மெட்டிகளுக்கு செய்கூலி, சேதாரம் இல்லை. அதேபோல் ரூபாய் 500, 1000, 2000, 5000 நகை சீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு அன்பளிப்பு வழங்கப்பட உள்ளது.

# வாண்டாகோட்டை விஜிஎஸ் இல்ல காதணி & திருமண விழா நாளை நடைபெறுகிறது



திருவரங்குளம் , பிப்-4

வாண்டாகோட்டை விஜிஎஸ் இல்ல காதணி & திருமண விழா நாளை திருவரங்குளத்தில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, வாண்டாகோட்டை நெல் வியாபாரி தொழிலதிபர் கோவிந்தராசு & சித்ரா தம்பதியினரின் மகன் சுரேஷுக்கு காதணி விழாவும், அவரது சகோதரி ரேணுகாவிற்கும் குளத்தூர் தாலுகா, இறையூரை சேர்ந்த மின்வாரிய அலுவலகத்தில் பணியாற்றி வரும் முருகையா & சோலையம்மாள் தம்பதியினரின் மகன் அடைக்கலராஜுக்கும் திருமண விழா ஆகிய இரண்டு நிகழ்வுகள் பெருந்தொழில் அதிபர், புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் ராமச்சந்திரன், புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் வி.சி.ராமையா ஆகியோரது தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், திருவரங்குளம் சேர்மன் தங்கமணி வள்ளியம்மை, திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் அரு வடிவேல், எஸ்விஎஸ் மோட்டார்ஸ் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார், பூவரசகுடி கூட்டுறவு வங்கி தலைவர் மணியம்பலம் வைத்திலிங்கம், ஆலங்குடி பழனியப்பன் செட்டியார், நக்கீரர் வயல் கிருஷ்ணசாமி கண்டியர், பாலக்குடிப்பட்டி நீர் பாசன குழு தலைவர் முத்து -சித்ராதேவி, காவல்துறை உதவி ஆய்வாளர் சுப்பையா-கலையரசி, உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்கள் கலந்து கொண்டு விழாவில் செல்வங்களை வாழ்த்தி சிறப்பிக்க உள்ளனர்.

# சென்னை சர்வதேச விமான நிலையத்தில் பன்னடுக்கு கார் பார்க்கிங் வசதி இன்று திறப்பு



சென்னை , பிப். 4-

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் பன்னடுக்கு கார் பார்க்கிங் வசதியை மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா இன்று திறந்து வைக்கிறார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள தகவலில்: சென்னை சர்வதேச விமான நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ள பன்னடுக்கு கார் பார்க்கிங் வசதியை மத்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு, பால் வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன் முன்னிலையில், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் எஃகுத்துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா இன்று சனிக்கிழமை திறந்து வைக்கிறார்.

6 அடுக்குகள் கொண்ட வாகனங்கள் நிறுத்தும் வசதி 2.5 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். இதில் 2 ஆயிரத்து 150 கார்களை நிறுத்த முடியும். இருசக்கர வாகனங்களுக்கு தனி இடமும் உள்ளது. இந்த வாகன நிறுத்துமிட வளாகத்தில், மின்சார வாகனங்களுக்கான சார்ஜ் நிலையங்கள், உணவு விடுதிகள் சில்லரை வணிகக் கடைகள், சிறுவர்கள் விளையாடும் இடங்கள் உள்பட பல்வேறு வணிக வசதிகளும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிற்பகல் 2 மணியளவில் சென்னை சர்வதேச விமான நிலையத்தின் 4-வது முனைய பகுதியில் திறப்புவிழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, டாக்டர் கனிமொழி என்விஎன் சோமு, சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு சந்தன காப்பு அலங்காரம் மிக சிறப்பாக நடைபெற்றது , இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் மேலப்பட்டியில்

# என்.எம்.எம்.எஸ் தேர்வுக்கான முதல் ஆன்லைன் மாதிரி தேர்வு



புதுக்கோட்டை,பிப்.4-

புதுக்கோட்டை மாவட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மேலப்பட்டியில் என்.எம்.எம்.எஸ் தேர்வுக்கான முதல் ஆன்லைன் மாதிரி தேர்வு நடைபெற்றது, தமிழ்நாடு முழுவதும் ஆசிரியர் மோகன் குழுவால் வெளியிடப்பட்ட ஆன்லைன் வினாத்தாளை கொண்டு பெரும்பான்மையான பள்ளிகளில் இந்த மாதிரி தேர்வை அந்தந்த பள்ளியின் ஆசிரியர்கள் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இந்த என்.எம்.எம்.எஸ் ஆன்லைன் தேர்வில் மேலப்பட்டி மாணவர்கள் 10 பேர் கலந்து கொண்டு கைபேசி மூலம் தேர்வு எழுதினர் .இந்த தேர்வை தலைமை ஆசிரியர் சீதாலட்சுமி ,ஆசிரியர்கள் மகேஸ்வரன் ,சரவணன், ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்பாக நடத்தினர். மாணவர்கள் ஆர்வத்துடன் இத்தேர்வை எழுதினர்.

# செங்கோட்டையில் காங்கிரஸ் சார்பில் இந்திய ஒற்றுமை நடை பயண வெற்றி விழா



தென்காசி,பிப்.4-

தென்காசி மாவட்டம் செங்கோட்டை நகராட்சி காங்கிரஸ் சார்பில் இந்திய ஒற்றுமை நடைபயண வெற்றி விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 5 மாதங்களில் 3,970 கி.மீ., தூரம் நடைபெற்ற இந்திய ஒற்றுமை பயணத்தின் வெற்றி விழா கொண்டாட்டம் செங்கோட்டை நகர காங்கிரஸ் சார்பில் நடைபெற்றது.

செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த விழாவிற்கு செங்கோட்டை நகர காங்கிரஸ் தலைவர் ராமர் தலைமை வகித்தார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் செண்பகம், மாவட்ட பிரதிநிதி ஆதிமூலம், நகர துணைத் தலைவர்கள் காதர் அலி,கோதரிவாவா, மாரியப்பன், நகர செயலாளர் இசக்கியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், செங்கோட்டை நகர இலக்கிய அணி தலைவர் ராஜீவ் காந்தி அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காங்கிரஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துசாமி , பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார், மேலும் தேசியக் கொடியை கையில் ஏந்தியும், பட்டாசு வெடித்தும் இந்திய ஒற்றுமை பயணத்தின் வெற்றி விழா கொண்டாடப் பட்டது, முன்னதாக தேசத்தந்தை மகாத்மா காந்தியின் முழு உருவச் சிலைக்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சுப்பிரமணியன், நகர மகளிர் காங்கிரஸ் தலைவி முத்துலெட்சுமி, செயலாளர் தங்கம், வார்டு தலைவர்கள் நடராஜன், கோட்டைச் சாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், சரவணன், நிர்வாகிகள் சிவன், சித்திக், கந்தவேல் முருகன், ரவி (எ) முருகேசன், நாகூர் மைதீன், நகர இளைஞர் காங்கிரஸ் கார்த்திக் உள்ளிட்டபலரும் பங்கேற்றனர், முடிவில் நகர இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சங்கரலிங்கம் நன்றி கூறினார்.

# 'அதிமுக இணைப்புக்கு ஒன்றிணையும் சூழ்நிலை வந்துவிட்டது' – சென்னையில் சசிகலா பேட்டி



சென்னை, பிப்-4

அதிமுகஇணைப்புக்குமிக அருகில் நெருங்கிவிட்டதாக சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த வி.கே.சசிகலா தெரிவித்தார்.

அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் நேற்று சசிகலா அஞ்சலி செலுத்தினார். இதனைத் தொடர்ந்துசெய்தியாளர்களிடம் பேசிய அவர்,"எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகிய இரண்டு தலைவர்களும் சொன்னதை மனதில் வைத்து நம்முடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பது போல் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என்ற வார்த்தையை தான் இப்பவும் சொல்கிறேன். எப்போதும் சொல்கிறேன்.

அதிமுகஇணைப்புக்குமிக அருகில் நெருங்கி விட்டோம். தனித்தனியாக இருந்தால் அதிமுகவிற்கு நல்லது இல்லை. ஒன்றிணைந்து செயல்படுவோம் என்பது தான் ஆரம்ப காலத்தில் இருந்து இப்போது வரை நான் சொல்வது. ஒன்றிணையும் சூழ்நிலை வந்துவிட்டது என்பது எனக்கு தெரிகிறது. இடைத்தேர்தலில் என்னுடைய நிலைப்பாட்டை பொறுத்திருந்து பாருங்கள்.

கடலில் பேனா நினைவுச் சின்னம் வைப்பதை நான் எதிர்க்கிறேன். அதற்கு காரணம் கடலுக்குள் சென்று அதை செய்வது நல்லது இல்லை. இது மீனவர்களை பாதிக்கும் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்திகிறேன். அப்படி நினைவு சின்னம் வைக்கவேண்டும்என்றுஆசை இருந்தால் கருணாநிதியின் சமாதியில் நினைவு சின்னத்தை வைக்கலாம்.

பேனா நினைவுச் சின்னத்தை இத்தனை அடி உயரத்தில் தான் வைக்க வேண்டும் என்பது கணக்கில்லை. தமிழ்நாட்டின் நிதி நிலையை பார்க்க வேண்டும். அதற்கு ஏற்ப திட்டங்களைவகுக்கவேண்டும். மக்களுக்கு பயன்படும் திட்டங்களை எல்லாம் நிறுத்தி வைக்கிறார்கள். கேட்டால் நிதி இல்லை என்று கூறுகிறார்கள். ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்களை நிறுத்தி இருக்கிறார்கள். அப்படியென்றால் பேனா நினைவுச் சின்னம் வைப்பதற்கு மட்டும் ரூ.87 கோடி நிதி எங்கிருந்து வருகிறது." இவ்வாறு அவர் கூறினார்.


பொன்னமராவதில் கடை வாடகைக்கு
அன்னை ஆரூஸ் வணிக வளாகம்
திருப்பத்தூர் சாலை, பொன்னமராவதி
முதல் தளம் மொத்தமாக வாடகைக்கு விடப்படும்
தொடர்புக்கு : 09840528152
09434281542 / 9965947610


# அரியலூர் திருவருட்பிரகாச வள்ளலார் மடத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு கொடியேற்றம்



அரியலூர், பிப்.4-

அரியலூர் திருவருட்பிரகாச வள்ளலார் மடத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு, கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. அரியலூர் அரசு கலைக்கல்லூரி சாலையிலுள்ள திருவருட்பிரகாச வள்ளலார் மடத்தில், வருகிற 5-ம் தேதி தைப்பூச விழா சிறப்பாக நடைபெற உள்ளது. அதற்கான கொடியேற்று விழா, வள்ளலார் மடத்தில் பூசகர் கணபதிப்பிள்ளை முன்னிலையில், நேற்று காலை நடைபெற்றது.

அரியலூர் மணிவாசகர் மன்றத் தலைவரும், பக்த பிரமுகருமான புலவர் சி .இளங்கோ, சன்மார்க்க சங்க கொடியை ஏற்றி வைத்து வழிபாடு செய்தார், அங்கு வந்த பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு, சர்க்கரை பொங்கல் உள்ளிட்ட அன்னதானம் வழங்கப்பட்டது, பக்திசிரத்தையுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் சங்கரநாராயணன், டாக்டர் நாகராஜன், மற்றும் சன்மார்க்க அன்பர்கள் சுப்பிரமணியம், சண்முகம், சீனிவாசன், பிரேமாவதி, செண்பகவல்லி, பழனியாண்டி ஆசிரியர், சிவக்குமார், சிதம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் பேறிஞர் அண்ணாவின் 54 வது நினைவு தினம்



தென்காசி,பிப்.4-

தென்காசியில் தெற்கு மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 54 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவ பத்மநாதன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி , முத்துப்பாண்டி, மாவட்ட துணை செயலாளர் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சீவநல்லூர் சாமித்துரை, தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ரவிசங்கர், திவான் ஒலி, பேரூர் செயலாளர்கள் சுடலை, வெள்ளத்துரை, மாவட்ட அணி அமைப்பாளர்கள் முத்துராம லிங்கம், ஜபருல்லாகான், பேபி, கோமதிநாயகம், இசக்கி பாண்டியன், காசிதர்மம் துரை, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ஹக்கீம், கண்ணன், முத்துவேல், பி.எஸ்.மாரியப்பன், விஜயன், மாரிக்குட்டி, ஷமீம் இப்ராஹிம், கல்வத்து, இஞ்சி இஸ்மாயில், வெல்டிங் மாரியப்பன், நன்னை சுந்தர், ஜீவானந்தம், ராமராஜ், கார்த்திக், நிஷா, ரஹ்மத் துல்லாஹ், சுந்தரம் என்ற சேகர், காசிகிருஷ்ணன், பொரோஸ்கான், வசந்தகுமார், இசக்கி பாண்டியன், வீரபாண்டியன், சரவணன், சலீம் , பாலு, இசக்கி துரை, சுரேஷ், ஆனந்த், ஆனந்தராஜ், சிவன் பாண்டியன், சுந்தர்ராஜ், அழகு துரை, ஹரி, இப்ராஹிம், கபீர், குத்தாலிங்கம், கஜேந்திரன், குமார், லியாகத் அலி, சாகுல் ஹமீது, வெங்கடேசன், மோகன்ராஜ் சரவணன், சுரேஷ், சுப்பிரமணியன், நவநீதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# மழையினால் பாதிக்கப்பட்ட பயிர்களை வேளாண்மைத்துறை இயக்குநர் அண்ணாதுரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



அறந்தாங்கி , பிப்-4

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம், பூவலூர் கிராமத்தில் மழையினால் சம்பா பருவத்தில் சாகுபடி செய்த பயிர்களில், அறுவடை நிலையிலிருந்த நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளதை, வேளாண்மைத்துறை இயக்குநர் அண்ணாதுரை நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது அவர் கூறுகையில்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2023 பிப்ரவரி 1 மற்றும் 2 ஆம் தேதியில் பெய்த மழையினால் சம்பா பருவத்தில் சாகுபடி செய்த பயிர்களில் அறுவடை நிலையிலிருந்த நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் வட்டாரம், பூவலூர் கிராமத்தில் ஆரோக்கியமேரி மற்றும் ராமு ஆகியோர்களது வயல்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் சம்பா பயிர்கள் குறித்து ஆய்வுசெய்யப்பட்டது. ஆய்வின்போது கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

மேலும் சம்பா நெல் அறுவடை நிலையில் உள்ள பயிர்கள் இரண்டு நாட்களில் பெய்த மழையினால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெல் பயிர் நனைந்த காரணத்தினால் பயிர் சாய்ந்து உள்ளது. இதன்மூலம் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து நெல் மணிகளை பாதுகாக்கும் வகையில், பள்ளமான வயல்களில் தேங்கியுள்ள நீரினை வடிகால் அமைத்து வடித்து, நெல் மணிகள் நனைந்து முளைக்காமல் இருக்க, வயலினை காயவிட்டு, அறுவடை பணிகள் மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், மணமேல்குடி ஆகிய வட்டாரங்களில் ஏற்கனவே அறுவடை செய்த நெல் வயல்களில் நெல்லுக்கு பின்பு உளுந்து பயிர் சாகுபடி செய்திட விவசாயிகளிடம் அறிவுரை வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 9 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர், உளுந்து பயிர் சாகுபடி செய்தி இலக்கு வழங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு பின்பு உளுந்து சாகுபடி செய்திட 50 சதவீத மானிய விலையில் சான்று பெற்ற விதைகள் மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே நெல் தரிசில் அறுவடை முடிந்த வயல்களில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றிடவும், மேலும் மண்வளம் காத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என வேளாண்மைத்துறை இயக்குநர் அண்ணாதுரை தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, வேளாண்மை இணை இயக்குனர் மா.பெரியசாமி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) மோகன்ராஜ், அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் பத்மப்பிரியா, ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வில்லியம் மோசஸ், வேளாண்மை அலுவலர்கள் பிரவினா, பாக்யா, உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



▶ தமிழ்நாடு விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேற்று சென்னை சேத்துப்பட்டில் உள்ள உலக பல்கலைக்கழக சேவை மையத்தில் ஜனவரி 26 ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற தமிழ்நாட்டை சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கலந்துரையாடி வாழ்த்து பெற்றனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் மேகநாத ரெட்டி, மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் செந்தில்குமார், ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரமூர்த்தி, மண்டல இயக்குனர் சாமுவேல் செல்லையா ஆகியோர் உடன் இருந்தனர்.

# கறம்பக்குடி பகுதிகளில் தொடர் மழையால் நீரில் மூழ்கிய நெற்பயிர்கள் விவசாயிகள் வேதனை

கறம்பக்குடி, பிப்.04-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே தொடர் மழை காரணமாக 300 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர், உரிய இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று தொடர்ந்து கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக விட்டு விட்டு மழை பெய்வதும் மேகமூட்டத்துடன் காணப்படுவதுமாக இருந்து வந்தது.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கன மழையால் கறம்பக்குடி தாலுகா செங்கமேடு கிராமத்தில் 500 ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் சம்பா அறுவடைக்கு காத்திருந்த நிலையில் தொடர் மழையின் காரணமாக 300 ஏக்கர் பரப்பளவில் உள்ள நெற்பயிர்கள் முற்றிலுமாக நீரில் மூழ்கி சேதமடைந்து முளைக்கத் தொடங்கின, இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். விவசாயத்தை நம்பியே தாங்கள் பிழைப்பு நடத்தி வருவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சேதமடைந்த இடத்தை நேரடி ஆய்வு மேற்கொண்டு உரிய இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாதவ இனத்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அறிவிக்க கோரிக்கை

## சிறப்பாக செயல்பட்டு வரும் ஓய்எஸ்சி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முதல் பரிசு கோப்பை

திருச்சி, பிப்.4-

தமிழ்நாடு யாதவர் ஆலோசனை மைய மாநில செயற்குழு மற்றும் மாநிலபொதுகுழுகூட்டம் யாதவர் ஆலோசனை மையத்தின் மாநிலசெயற்குழு மற்றும் பொதுகுழுகூட்டம் மாநிலதலைவர் (காவல்துறைகூடுதல்கண்காணிப்பாளர்ஓய்வு)ஜம்புலிங்கம் தலைமையில் திருச்சிஸ்ரீரங்கம் மூலத்தோப்பு ஜிஎஸ்ஆர்கே. திருமணமண்டபத்தில் நடைபெற்றது.



யாதவர் ஆலோசனை மையத்தின் நிறுவனர் வீரஇளஞ்சோழன், ஆடிட்டர் எல்.ராகவன், மாநில பொது செயலாளர் ஜி.ஜெயராமன், மாநில பொருளாளர் என். ரவிச்சந்திரன், மாநிலதுணைத் தலைவர் சிங்கப்பூர் தொழிலதிபர் விஜய்ஆனந்த், சிங்கப்பூரின் ஒய்ஏசி பொறுப்பாளர் வளர்மதி விஜய்ஆனந்த் மற்றும் ஜிஎஸ்ஆர்கே திருமண மண்டபத்தின் உரிமையாளர் விஜயராகவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதல்நிகழ்வாக சிங்கப்பூர் வளர்மதி விஜய்ஆனந்த், மாநிலத் தலைவர் சென்னை ஜம்புலிங்கம், சிங்கப்பூர் தொழிலதிபர் விஜய்ஆனந்த், மாநிலதுணைத் தலைவர் அரியலூர் என்.ரவிச்சந்திரன், ஸ்ரீரங்கம் ஜிஎஸ்ஆர்கே. திருமண மண்டப உரிமையாளர் விஜயராகவன், கூத்தாநல்லூர் மருந்தக உரிமையாளர் கண்ணன், மாயவரம் பார்த்திபன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றினர். மாநிலத்தலைவர் ஜம்புலிங்கம் தலைமை வகித்து வரவேற்று பேசினார்..

தொடக்கமாக கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் சுய அறிமுகம் செய்து கொண்டனர். யாதவர் ஆலோசனை மையத்தின் நிறுவனர் வீரஇளஞ்சோழன் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார், ஒய்ஏசி மாநில மையம் சார்பாக சிறப்பாக செயல்பட்டு வரும் ஓய்எஸ்சி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முதல் பரிசு கோப்பையும், ஒய்ஏசிதஞ்சாவூர் மாவட்டத்திற்கு இரண்டாம் பரிசு கோப்பையும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி வரும் ஒய்ஏசிநிறுவனர் மாநிலதலைர், மாநிலபொதுச் செயலாளர், மாநில பொருளாளர் முன்னாள் தலைவர் ஆர். கே.பாலகுணசேகரன் ஆகியோரை கௌரவிக்கும் வகையில் ஒய்ஏசி மாவட்டங்கள் சார்பாக நினைவுபரிசு வழங்கப்பட்டது. மேலும் ஒய்ஏசி மாநிலமையம் சார்பாக தஞ்சாவூர் இளஞ்சேகரன், சிங்கப்பூர் தொழிலதிபர் விஜய்ஆனந்த், வளர்மதிவிஜய்ஆனந்த், எவ்விதகட்டணமும் இன்றி திருமண மண்டபத்தில் கூட்டம் நடத்தஅனுமதி அளித்த ஸ்ரீரங்கம் ஜிஎஸ்ஆர்கே.திருமண மண்டப உரிமையாளர் விஜயராகவன் ஆகியோரைப் பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது.

மாநில பொதுச் செயலாளர் ஆடிட்டர் ராகவன் யாதவ ஆலோசனை மைய அறிக்கையையும் மாநில பொருளாளர் ஜி.ஜெயராமன் வரவுசெலவு அறிக்கையையும், மாநில துணைத் தலைவரும் புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளருமான முருகையா தீர்மானங்களையும் தாக்கல் செய்தனர்.



▶ வேலூருக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வேலூர் நருவி மருத்துவமனை வளாகத்தில் நருவி மருத்துவமனையின் முதல்வர் ஜி.வி. சம்பத் புத்தகம் தந்து வரவேற்றார்.



▶ பள்ளி கல்வித்துறை மூலம் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் சார்பில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மாணவ- மாணவிகள் பங்கேற்ற "புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்" விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேலூர் மாவட்டத்திலுள்ள, வேலூர் புறநகர், அலமேலு மங்காபுரம் அரசு ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்து, மாணவர்களுக்கு உணவு பரிமாறினார். இந்நிகழ்வின் போது வேலூர் மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் அலுவலர்கள் உடனிருந்தனர்.



▶ காரைக்கால் மாவட்டம் அம்பகரத்தூர் அருகில் அமைந்துள்ள தாமானாங்குடி பாலம் நேற்று காலை பழுதடைந்த நிலையில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது. இந்நிகழ்வை அறிந்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முகம்மது மன்சூர் நேரில் சென்று பழுதடைந்த பாலத்தை பார்வையிட்டார். மேலும் அங்கு இருந்த பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சந்திரசேகரிடம் பழுதடைந்த பாலத்தை சரி செய்து உடனடியாக போக்குவரத்தை சரி செய்யும்படியும் பொதுப்பணித்துறை அதிகாரிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.



▶ அறந்தாங்கி அடுத்த சுப்பிரமணியபுரத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு தினத்தையொட்டி அவரது திரு உருவச் சிலைக்கு அறந்தாங்கி தெற்கு ஒன்றிய மதிமுக சார்பில் ஒன்றிய செயலாளர், தலைமைக் கழக பேச்சாளர் நா.செ. புகழேந்தி மாநில பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், ஒன்றிய துணைச் செயலாளர் தம்பா வெங்கடேசன், ஒன்றிய அவைத்தலைவர் கீழ்க்குடி மணி, ஒன்றிய பொருளாளர் சீனமங்கலம் பழனி, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் கீழ்க்குடி ரவி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சீனிவாசன், ஒன்றிய சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் சலீம், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் சாமி ஆத்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்..

# தைப்பூசத்திற்கு பழனி முருகன் கோயில் செல்ல சிறப்பு ரயில்கள் அறிவிப்பு!

சென்னை ,பிப்-4

முருகன், தமிழ்க்கடவுள் என்று அனைவராலும் கொண்டாடி மகிழும் தெய்வம். அப்படிப்பட்ட முருகனைக் கொண்டாடும் திருவிழாக்களில் முக்கியமானவை வைகாசி விசாகம், திருக்கார்த்திகை, கந்த சஷ்டி விரதம், பங்குனி உத்திரம்,தைப்பூசம் ஆகும். இவற்றில் தைமாதம் வரும் பூச நட்சத்திரம் மிகவும் சிறப்புடையது. இந்த ஆண்டு தைப்பூசம் (பிப்ரவரி மாதம் 5ஆம் தேதி) தை மாதம் 22ம் தேதி வருகிறது.

இந்நிலையில், தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, மயிலாடுதுறையில் இருந்து பழனிக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.பிப்ரவரி 4,5 ஆகிய இரு தினங்களில் மயிலாடுதுறையில் இருந்து இரவு 7.35 மணிக்கு புறப்படும் ரயில், பழனிக்கு மறுநாள் அதிகாலை 3 மணிக்கு சென்றடையும். மறு மார்க்கத்தில் பிப்ரவரி 5,6 ஆகிய இரு தினங்களில் பழனியில் அதிகாலை 4 மணிக்கு புறப்படும் ரயில் , மயிலாடுதுறைக்கு காலை 10.30 மணிக்கு சென்றடையும். அதே போல் பிப்ரவரி 5,6 ஆகிய இரு தினங்களில் மயிலாடுதுறையில் காலை, 7.15 மணிக்கு புறப்படும் மற்றொரு ரயில் பழனிக்கு பகல் 1.15 மணிக்கு சென்றடையும். மறு மார்க்கத்தில், அதே தினங்களில் பழனியில் பகல் 2 மணிக்கு புறப்பட்டு மயிலாடுதுறைக்கு இரவு, 8.30 மணிக்கு சென்றடையும்

இந்த சிறப்பு ரயில்கள் மயிலாடுதுறை - கும்பகோணம் - பாபநாசம்- தஞ்சாவூர்- உள்ளிட்ட ரயில் நிலையங்களிலும் நின்று செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது

# இசை படைப்புகளுக்கு சேவை வரி ஏ.ஆர்.ரஹ்மான், ஜி.வி.பிரகாஷ் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி

சென்னை , பிப். 04-

இசை படைப்புகளுக்கு சேவை வரி விதிப்பை எதிர்த்து பிரபல இசையமைப்பாளர்கள் ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் ஜி.வி. பிரகாஷ்குமார் ஆகியோர் தாக்கல் செய்த வழக்குகளை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், தனது படைப்புகளுக்கு, 6 கோடியே 79 லட்ச ரூபாய் சேவை வரி செலுத்த வேண்டும் என சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜி.எஸ்.டி ஆணையர் 2019ஆம் அண்டு உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி கடந்த 2020 ஆண்டு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இசை படைப்புகளின் காப்புரிமை, பட தயாரிப்பாளர்களுக்கு நிரந்தரமாக வழங்கிய பின், அதன் உரிமையாளர்கள் அவர்கள் தான் என்றும், தன்னிடம் வரி வசூலிப்பது



சட்டவிரோதம் எனவும் மனுவில் தெரிவித்திருந்தார். தன் புகழுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் கூறியிருந்தார்.

இந்த வழக்கில் ஜி.எஸ்.டி. ஆணையர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், வரி ஏய்ப்பு செய்ததாக கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே ஏ.ஆர். ரகுமானுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும், அவரது புகழை களங்கப்படுத்தும் நோக்கம் ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஜி.எஸ்.டி. துறையிலேயே மேல்முறையீடு செய்து தீர்வை பெறாமல் தொடரப்பட்ட இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும், கூறப்பட்டிருந்தது.

இதேபோல, ஒரு கோடியே 84 லட்சம் ரூபாய் சேவை வரி செலுத்த கூறி ஜி.எஸ்.டி ஆணையர் அனுப்பிய நோட்டீசை எதிர்த்து இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்குமாரும் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி அனிதா சுமந்த், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் மனு விசாரணைக்கு உகந்ததல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

மேலும் ஜி.எஸ்.டி. ஆணையரின் உத்தரவை எதிர்த்து ஜி.எஸ்.டி. மேல் முறையீட்டு அதிகாரியிடம் நான்கு வாரங்களில் மேல் முறையீடு செய்யலாம் எனவும் உத்தரவிட்டார். ஜி.எஸ்.டி. வரி விதிப்பது தொடர்பாக விளக்கம் கேட்டு அனுப்பிய நோட்டீசை எதிர்த்து இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்குமார் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி அனிதா சுமந்த் நான்கு வாரங்களில் ஜி.எஸ்.டி ஆணையர் அனுப்பிய நோட்டீசுக்கு பதிலளிக்கவும் உத்தரவிட்டார்.

# பேட்டரியால் இயங்ககூடிய விமானம் கண்டுபிடிப்பு

அமெரிக்கா , பிப்.4-

அமெரிக்காவின் நாசா, சிறிய ரக மின்சார விமானம் ஒன்றை, இந்த ஆண்டுமுதல் முறையாக பறக்கவிடவுள்ளது.



இத்தாலியின் டெக்னம் பி2006டி விமானத்தை மாற்றியமைத்து பரிசோதனை முயற்சியாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த விமானம் லித்தியம் பேட்டரியால் இயங்ககூடியது. இந்த விமானத்துக்கு எக்ஸ் - 57 என பெயரிடப்பட்டுள்ளது. இதன் இறக்கையில் 14 புரொபல்லர்கள் பொருத்தப்பட்டுள்ளன. 4 இருக்கைகள் கொண்ட சிறிய விமானமாக எக்ஸ்-57 தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் இறக்கைகள் மிக நீளமாக உள்ளன. இவற்றை தேவையற்ற நேரத்தில் மடித்துக் கொள்ள முடியும். வழக்கமான பெட்ரோலிய எரிபொருளை பயன்படுத்தும் போது, எரிபொருள் தீர தீர, விமானத்தின் எடை குறையும்.

பேட்டரியில் இருந்து கிடைக்கும் சக்தி அதன் எடை மற்றும் அளவை பொருத்ததாக உள்ளது. அதிலிருந்து கிடைக்கும் சக்தியும், வழக்கமான விமான எரிபொருளில் இருந்து கிடைக்கும் சக்தியைவிட 50 மடங்கு குறைவாக உள்ளது. தற்போது குவாண்டம் தொழில்நுட்பத்தில் பேட்டரிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றை வேகமாக சார்ஜ் செய்ய முடியும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பேட்டரிகளில் லித்தியம் பேட்டரி சிறப்பானதாக உள்ளது. ஆனாலும் அவற்றின் எடை அதிகமாக உள்ளது. லித்தியம் எளிதில் தீப்பிடிக்ககூடியதால், அது தீங்கு விளைவிக்கும் அபாயமும் உள்ளது.

நாசா உருவாக்கியுள்ள எக்ஸ் - 57 மின்சார விமானத்தில் 160 கி.மீ தூரம் வரை பறக்கலாம். இதற்கு ஒரு மணி நேரம் ஆகும். பரிசோதனை முயற்சியாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த மின்சார விமானம் இந்த ஆண்டு பறக்க விடப்படவுள்ளது.

# இயக்குநர் கே.விஸ்வநாத் மறைவு திரைக் கலைஞர்கள், தலைவர்கள், ரசிகர்கள் புகழஞ்சலி

ஹைதராபாத், பிப்.4-

தெலுங்கு சினிமாவின் மூத்த கலைஞரும், தாதா சாகேப் விருது பெற்ற பழம்பெரும் இயக்குநருமான கே.விஸ்வநாத் மறைவை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி, அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் தங்களின் இரங்கல் செய்திகளைப்பதிவுசெய்து வருகின்றனர். முன்னதாக கே.விஸ்வநாத் நேற்று உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 92.


பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கல் குறிப்பில், "கே.விஸ்வநாத் காரு மறைவால் வருந்துகிறேன். அவர் சினிமா உலகின் ஜாம்பவானாக இருந்தவர். பன்முகத்தன்மைகொண்ட படைப்பாளி. அவருடைய திரைப்படங்கள் பல்வேறு கருத்துகளை முன்வைத்து சினிமா ஆர்வலர்களை ஆண்டாண்டு காலமாக ஈர்த்து வைத்துள்ளது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்கள். ஓம் சாந்தி" என்று பதிவிட்டுள்ளார்.

இயக்குநர் கே.விஸ்வநாத் மறைவை ஒட்டி நடிகர் கமல்ஹாசன் தனது ட்விட்டர் பக்கத்தில் இரங்கலைப் பதிவு செய்துள்ளார். அந்த இரங்கல் குறிப்பில். "வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை கலாதபஸ்வி விஸ்வநாத் நன்கு அறிந்திருந்தார். அவரது படைப்புகள் காலம் கடந்து கொண்டாடப்படும். வாழ்க அவரது கலை. உங்களின் தீவிர ரசிகன் கமல்ஹாசன்" என்று பதிவிட்டிருந்தார்.

தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி, "இயக்குநர் கே.விஸ்வநாத்தின் மறைவு தெலுங்கு மற்றும் இந்திய சினிமாவில் ஈடு செய்ய முடியாத இழப்பு. எனக்கும் தனிப்பட்ட முறையில் பேரிழப்பு. காலத்தை வெல்லும் படைப்புகளை வழங்கிய அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும். ஓம் சாந்தி!" என்று பதிவிட்டுள்ளார்.

இயக்குநர் கே.விஸ்வநாத்தின் சிப்பிக்குள் முத்து படத்தில் நடித்த நடிகை ராதிகா, "இயக்குநர் விஸ்வநாத் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல். கலைத்துறையிலும், அவருக்கே உரித்தான தனித்த சிந்தனையிலும் ஒரு வெற்றிடத்தை உருவாக்கிவிட்டார். அவருடைய படைப்புகளில் ஒரு நோக்கம் இருக்கும். புயலுக்கு மத்தியில் ஓர் அமைதி அவர்" என்று பதிவிட்டுள்ளார்.

மலையாள திரைப்பட நடிகர் மம்மூட்டி, "



கே.விஸ்வநாத் காரு மறைவால் ஆழ்ந்த துக்கம் கொள்கிறேன். அவரது இயக்கத்தில் நடித்த பெருமை எனக்குள்ளது. அவரது உறவினர்களுக்கு எனது இரங்கலை உரித்தாக்குகிறேன்" என்று ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

'கலா தபஸ்வி' என அழைக்கப்படும் பிரபல இயக்குநர் கே.விஸ்வநாத். இவர் 19.2.1930-ம் ஆண்டு ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் பிறந்தார். இவருக்கு ஜெயலட்சுமி என்ற மனைவியும், நாகேந்திரநாத், ரவீந்திரநாத் என்கிற மகன்களும், பத்மாவதி என்கிற மகளும் உள்ளனர். இவர் கடந்த 1957-ல் சென்னையில் தனது திரைப்பட வாழ்க்கையை தொடங்கினார். 1975-ல் முதன்முறையாக ஆத்ம கவுரவம் என்ற தெலுங்கு திரைப்படத்தை இயக்கினார். இதற்கு நந்தி விருது வழங்கப்பட்டது. அதன் பின்னர் இவர் சிரிசிரி முவ்வா, சங்கராபரணம், சலங்கை ஒலி, சிப்பிக்குள் முத்து உட்பட பல தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம் மற்றும் கன்னடப் படங்களை இயக்கினார்.

50 திரைப்படங்களை இயக்கி பிரபல இயக்குநராக அறியப்பட்டாலும், நடிப்பிலும் கவனம் செலுத்தினார். 2000களில் இருந்து பல திரைப்படங்களில் நடித்துள்ள இயக்குநர் கே.விஸ்வநாத், தமிழில் குருதிப்புனல், முகவரி, யாரடி நீ மோகினி, அன்பே சிவம், ராஜபாட்டை, சிங்கம்-2, உத்தம வில்லன் ஆகிய படங்களில் தனது முத்திரையை பதித்துள்ளார்.


திரைப்படத் துறைக்கான இந்தியாவின் மிக உயரிய விருதான தாதாசாகேப் பால்கே விருதைப் பெற்ற இவருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சமீபகாலமாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த இயக்குநர் கே விஸ்வநாத் ஹைதராபாத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். சமீபத்தில் நடிகர் கமல்ஹாசன் இவரை நேரில் சந்தித்த நலம் விசாரித்துவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். இவரின் மறைவு தென்னிந்திய திரையுலகினரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது



# இரட்டை இலை : பொதுக்குழுவை கூட்ட உச்சநீதிமன்றம் ஆலோசனை

# சென்னை விமான நிலையத்தில் கார் பார்க்கிங் வசதி இன்று திறப்பு






# நகை வியாபாரிகளிடம் போலீஸ் போல் நடித்து ரூ.1½ கோடி கொள்ளை

சென்னை / புதுக்கோட்டை | 04.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

04.02.2023 சனி

# வரலாற்றில் இன்று




## இன்றைய பிறந்த நாள்



மடபூஷிய அனந்தசயனம் அய்யங்கர், இந்திய அரசியல்வாதி, 2வது இந்திய மக்களவைத் தலைவர் (பி.1891) (இ.1978)



பி. ஏ. சுப்பையா பிள்ளை, தமிழக நாடக, திரைப்பட நடிகர் (பி.1895)



ராம் பரன் யாதவ், நேபாளத்தின் 1வது குடியரசுத் தலைவர் (பி.1948)

## இன்றைய நினைவு நாள்



மதுசூதன் தாசு, ஒடிசா கவிஞர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1848) (இ.1934)



சத்தியேந்திர நாத் போசு, இந்திய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி.1894) (இ.1974)



புளியங்குடி க. பழனிச்சாமி, தமிழக அரசியல்வாதி, பேச்சாளர் (பி.1938) (இ.2007)

## விடுதலை நாள் (இலங்கை)

## உலகப் புற்றுநோய் நாள்